# தற்காலிக சேதங்கள் / இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்தின் (CPTD) நிறைவேற்றுமுறை குறித்த தொகுப்புரை

i. ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) & ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி AIIB ஆகிய வங்கிகளால் கூட்டு நிதியுதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்திட்டத்திற்காக தற்காலிக இழப்பீடு திட்டம் (CPTD) தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த செயல்திட்டம், தற்செயல் குடியேற்றத்திற்கு 'B' எனவும் மற்றும் உள்நாட்டு மக்கள் பாதிப்பு விளைவுக்கு 'C' எனவும் வகைபிரிக்கப்படுகிறது. ADB-யின் மற்றும் AIIB-ன் பாதுகாப்பு வகைப்பிரிவின்படி, CPTD இழப்பீடு திட்டம் 2009-ம் ஆண்டு பவர்கிரிட்-ன் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கொள்கை மற்றும் நடைமுறைகள் (ESPP), 2009ம் ஆண்டு ADB பாதுகாப்பு கொள்கை அறிக்கை (SPS) மற்றும் 2016-ம் ஆண்டு AIIB-ன் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கட்டமைப்பு ஆகியவற்றை சார்ந்து இருக்கும். இதன் செயல்நிறுவனம் (EA), பவர்கிரிட் கார்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (பவர்கிரிட்) ஆகும் மற்றும் இந்த செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இது பொறுப்புடையதாக இருக்கும். மேலும் 2003-ம் ஆண்டு மின்சார சட்டம், 1885ம் ஆண்டு இந்திய டெலிகிராஃப் (தந்தியனுப்புச்) சட்டம், ESPP, SPS மற்றும் AIIB-ன் 2016ம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் சமூகக்கொள்கை மற்றும் தரகட்டுப்பாடுகள் ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின்படி தற்காலிக சேதங்கள் / இழப்புகளுக்கான இழப்பீடு திட்டம் அமையும்.

ii. பூர்வாங்க முக்கிய வழித்தட அளவு ஆய்வு அடிப்படையில் CPTD தயாரிக்கப்பட்டுள்ளது. நிலம் மற்றும் பயிர்கள் பாதிப்பு இயற்கையிலேயே தற்காலிக தாக்கமாகும். மேலும் மரங்கள் இழப்பும் எதிர்நோக்கப்படுகிறது. பெரும்பாலும் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தும்போது / கட்டுமானத்தின்போது தற்காலிக பாதிப்புகள் பெரிதும் எதிர்நோக்கப்படுகிறது. எனவே, இறுதி அளவு ஆய்வு இன்னும் செய்யப்படவில்லை என்பதாலும் மற்றும் உண்மையான தற்காலிக பாதிப்புகள் நடைமுறைப்படுத்தும்போது மட்டுமே தெரியவரும் என்பதாலும் CPTD ஒரு வரைவாகவே இருக்கிறது. மேலும் நடைமுறைப்படுத்துவதற்கு கட்டுமான ஒப்பந்ததாரர் பணியை செய்யும்போது விரிவான வடிவமைப்பு மற்றும் இறுதி அளவு ஆய்வின் அடிப்படையில் இது இருக்கும். பவர்கிரிட் நிறுவனம் உண்மையான, தற்காலிக இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கும். விரிவான அளவு ஆய்வுக்கு / சரிபார்ப்பு அளவு ஆய்வுக்குப் பிறகு மட்டுமே மின் கோபுரம் அமையவிருக்கும் சரியான இடம் தெரியவரும். டிரான்ஸ்மிஷன் லைன் கட்டுமானத்தின்போது சரிபார்ப்பு அளவு ஆய்வு படிப்படியாக மேற்கொள்ளப்படும். சாதாரணமாக நிலைப்பயிர் இல்லாதபோது பருவமற்ற காலத்தில் பணி மேற்கொள்ளப்படும். மூன்று கட்டங்களில் டிரான்ஸ்மிஷன் லைன்களின் கட்டுமான நடவடிக்கைகளுக்குப் பிறகு, அதாவது அடித்தளம் அமைத்தல், கோபுரம் நிர்மாணம் செய்தல், மின்கடத்திகளை இழுத்துக்கட்டும் பணிகள் முடிந்த பிறகு தற்காலிக இழப்புக்கான இழப்பீடு மதிப்பீடு செய்யப்படும். மேற்கூறிய மூன்று செயல்நடவடிக்கைகளின்போது மூன்று வேறுபட்ட இழப்புகள் இருக்குமானால், இழப்பீடு வழங்கலும் மூன்று தடவைகளில் வழங்கப்படலாம். டிரான்ஸ்மிஷன் லைன் கட்டுமானத்தின்போது CPTD நிகர்நிலைப்படுத்துதல் ஒரு தொடர் நடவடிக்கையாக இருக்கும்.

இதற்கு நிகழ்நிலைப்படுத்தப்பட்ட அரையாண்டு CPTD அறிக்கையை பவர்கிரிட் (POWERGRID) சமர்ப்பிக்கும்.

iii. ADB மற்றும் AIIB ஆகிய வங்கிகளால் கூட்டுநிதியுதவி செய்யப்படும் HVDC பைபோல் ராய்கர் - புகலூர் - வடக்கு திருச்சூர் லைனின் 2-ம் ஸ்கீமின் கீழ் உத்தேசிக்கப்பட்ட செயல்திட்ட முதலீட்டுக்கூறுகளில், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பல்வேறு துணைமின் நிலையங்களில் 16 எண்ணிக்கை பே (Bays) கட்டுதல் / விரிவுபடுத்துதல் மற்றும் 5 புதிய டிரான்ஸ்மிஷன் லைன்கள் ஆகியவை உள்ளடங்கும். பே விரிவுபடுத்துதல் தற்போதுள்ள பவர்கிரிட் நிறுவன துணைமின் நிலையங்களுக்குள் செய்யப்படும் (புகலூர்-புதியது) மற்றும் அரசூர், திருவலம், புகலூர் / உடுமலைப்பேட்டையில் (தற்போதுள்ள) துணைமின் நிலையங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஐந்து புதிய டிரான்ஸ்மிஷன் லைன்கள் :**

a) புகலூர் HVDC நிலையம் - புகலூர் (தற்போதுள்ளது) 400kv (குவாட்) D/C லைன் - ஏறக்குறைய 55 கி.மீ.
b) புகலூர் HVDC நிலையம் - அரசூர் 400kv (குவாட் D/C லைன் - ஏறக்குறைய 58 கி.மீ.
c) புகலூர் HVDC நிலையம் - திருவலம் 400kv (குவாட்) D/C லைன் ஏறக்குறைய 390 கி.மீ.
d) புகலூர் HVDC நிலையம் - எடையர்பாளையம் (TANTRANSCO) 400kv (குவாட்) D/C லைன் - ஏறக்குறைய 56 கிமீ
e) எடையர்பாளையம் (TANTRANSCO) – உடுமலைப்பேட்டை 400kv (குவாட்) D/C லைன் - ஏறக்குறைய 56 கி.மீ.

**தற்போதுள்ள துணைமின் நிலையங்களில் பதினாறு பே (BAYS) கட்டுதல்**

a) 4 எண்ணிக்கை கொண்ட 400KV குவாட் லைன்களை டெர்மினேஷன் செய்வதற்கு புகலூர் HVDC நிலையத்தில் 8 எண்ணிக்கை கொண்ட 400KV லைன் பே.
b) புகலூர் HVDC நிலையம் - அரசூர் 400KV D/C லைன் டெர்மினேட்ஷன் செய்வதற்கு அரசூரில் 2 எண்ணிக்கை கொண்ட 400KV லைன் பே.
c) புகலூர் HVDC நிலையம் - திருவலம் 400KV D/C லைன் டெர்மினேட்ஷன் செய்வதற்கு திருவலத்தில் 2 எண்ணிக்கை கொண்ட 400KV லைன் பே.
d) புகலூர் HVDC நிலையம் - புகலூர் (தற்போதுள்ளது) 400KV D/C லைன் டெர்மினேட்ஷன் செய்வதற்கு புகலூரில் (தற்போதுள்ள பவர்கிரிட் துணைமின் நிலையம்) 2 எண்ணிக்கை கொண்ட 400KV லைன் பே.
e) எடையர்பாளையம் - உடுமலைப்பேட்டை 400KV D/C லைன் டெர்மினேட்ஷன் செய்வதற்கு உடுமலைப்பேட்டையில் 2 எண்ணிக்கை கொண்ட 400KV லைன் பே.

iv. உத்தேசிக்கப்பட்டுள்ள நிதியுதவி கூறுகளின்கீழ் டிரான்ஸ்மிஷன் லைன்கள் மற்றும் கோபுரத்திற்கு[1] நிலம் கையகம் செய்யத்தேவையில்லை. எனவே, இந்த செயல்திட்டத்தில் இடப்பெயர்ச்சி எதுவும் எதிர்நோக்கப்படவில்லை. பயிர்கள் மற்றும் மரங்கள் இழப்பு வகையில் பாதிப்புகளின் தன்மையானது தற்காலிகமாகும். பூர்வாங்க வழித்தட அளவு ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 3 மாற்று வழித்தடங்களில் சிறந்த ஒரு சாத்தியமான வழித்தடம் தேர்வுசெய்யப்படும். அந்த தேர்வுசெய்யப்பட்ட வழித்தடத்தில் விரிவான அளவு ஆய்வு முக்கிய ஒப்பந்தங்களை நிறைவேற்றும்போது மேற்கொள்ளப்படும். தற்காலிக பயிர் இழப்பிற்கு, மதிப்பீடு செய்வதற்கு விவசாய நிலம் மற்றும் தனியார் தோட்டநிலம் மட்டுமே பரிசீலிக்கப்படுகிறது. 400KV லைன்களுக்கு RoW 46 மீட்டர் என்றபோதிலும் பாதிக்கப்பட்ட சராசரி அகலம் /வழிப்பாதை 40மீட்டர் என்ற வரம்புக்கு (அதிகபட்சம்) உட்பட்டதாக இருக்கும். CPTD-யில் அனைத்து மதிப்பீடுகளும் பூர்வாங்க அளவு ஆய்வு அடிப்படையிலேயே செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் மற்றும் மற்றவற்றின் இழப்பீடுகளுக்கு உண்மையான பாதிக்கப்பட்ட பகுதி அதிகபட்சம் 40 மீட்டர் அகல வரம்புக்கு மட்டும் உட்பட்டதாக இருக்கும். மொத்தம் 1845 கோபுரங்கள் அமைக்கப்படுவதன் காரணமாக, கோபுரங்களின் அடித்தளப்பகுதியை ஒட்டியுள்ள 912 ஏக்கர் நிலம் உட்பட மொத்தம் 6993.00 ஏக்கர்கள் நிலம் பாதிக்கப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

v. பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் சமுதாயத்தினருடன் கலந்தாலோசனைகள் செய்வது என்பது இச்செயல்திட்டத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு நடவடிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். செயல்திட்டத்திற்கு ஆயத்தமாதல் மற்றும் செயல்திட்டத்தை நிறைவேற்றுதல் ஆகிய பணிகளின் ஓவ்வொரு கட்டத்திலும் செயல்திட்டம் பற்றி பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். அளவு ஆய்வின் போதும்கூட பவர்கிரிட் தள அதிகாரிகள் மக்களை சந்தித்து டிரான்ஸ்மிஷன் லைன்கள் செல்லும் வழித்தடம் குறித்து அவர்களுக்கு தெரிவிப்பாகள். கட்டுமானத்தின் போது எவருடைய நிலத்தில் கோபுரம் நிர்மாணிக்கப்படுகிறதோ மற்றும் ROWஆல் எவரெவர் பாதிக்கப்படுகிறார்களோ அவர்கள் ஓவ்வொருவரும் இதுகுறித்து கலந்தாலோசிக்கப்படுவார்கள். டிரான்ஸ்மிஷன் லைன்களின் ஓட்டுமொத்த வழித்தடங்களின் பூர்வாங்க ஆய்வின்போது 2015 டிசம்பர் மற்றும் 2016 மே மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் ஒட்டுமொத்தமாக ஐந்து முறைகள் பொதுமக்களுடன் கலந்தாலோசனைகளுடன் மற்றும் பல முறைசாரா குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கலந்தாலோசனை நடைமுறை, செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போதும் மற்றும் O&M கட்டத்திலும்கூட தொடர்ந்து பின்பற்றப்படும் முன்வரைவு / சுருக்கத்தொகுப்பை CPTD வரைதளத்தில் இடம் பெறச் செய்வதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கும் மற்றும் இதர அக்கறை பங்குடையவர்களுக்கும் அது வெளிப்படுத்தப்படும். கட்டுமான பணி நடைபெறும் போது அவற்றை பார்வையிடுவதற்காக பவர்கிரிட் பணி அமைவிட அதிகாரிகள் அவ்விடங்களுக்குசெல்வதுடன் பாதிக்கப்பட்ட நபர்களை சந்தித்து அவர்களது இழப்புகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய இழப்பீடுகள் வழங்குவதற்குரிய விதிமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தும் அவர்களுடன் கலந்துபேசுவார்கள். பாதிக்கப்பட்ட நபர்களும் இழப்பீடு வழங்கும் விதிமுறைகள் மற்றும் கொள்கைகள் குறித்து தெரிந்துகொள்வதற்காகவும்

[1] 1885ஆம் ஆண்டில் இந்திய டெலிகிராஃப் சட்டத்தின் தொடர்புடைய விதிகள், அம்சங்களோடு சேர்த்து 2003 மின்சார சட்டத்தின் தற்போதைய விதிமுறைகளின்படி மின்கோபுரம் மற்றும் மின்தொடர் கம்பிகளை நிறுவுகின்றபோது, அந்நபருக்கு சேரக்கூடிய அனைத்து சேதங்களுக்கும் (குறிப்பிட்ட அந்த நிலப்பரப்பை கையகப்படுத்துவது இல்லாமல்) இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

மற்றும் அவர்களுடைய குறைகள் குறித்து கலந்துபேசுவதற்காகவும் பவர்கிரிட் ன்-தள கட்டுமான அலுவலகங்களுக்கு வருகை தரலாம் .CPTDயினை நிறைவேற்றும் முறை குறித்த சுருக்கம் மற்றும் உரிமை அம்சங்களின் தொகுப்பு தமிழ்மொழியில் கட்டுமானம் நடைபெறும் பணியிடங்களில் பார்வைக்கு வைக்கப்படும் .

vi. GRM என்பது, செயல்திட்ட அமலாக்கம் மற்றும் செயல்திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு என்ற செயல்திட்ட நிலையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். குறைதீர்ப்பு குழு (GRC) இரண்டு இடங்களில், அதாவது, ஒன்று செயல்திட்ட அமைவிட அளவிலும் மற்றும் மற்றொன்று கார்பரேட் அளவிலும் நிறுவப்படும். GRCகளில், செயல்திட்ட தலைவரின் தலைமையின்கீழ் நியமன அடிப்படையில் சமுதாயத்தில் மதிப்புமிக்கவர்கள், பவர்கிரிட் நிறுவனப்பணியாளர்கள், உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். குறைதீர்ப்பு குழுவில் (GRC) யார் யார் இடம்பெற்றுள்ளனர் என்பது குறித்து பரவலாக விளம்பரப்படுத்துவதற்காக, ஊராட்சி அலுவலகங்களிலும் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட தலைமையகத்திலும் அத்தகவல் காட்சிப்படுத்தப்பட வேண்டும். புகார் ஏதும் இருக்கும் பட்சத்தில், 15 நாட்களுக்குள் GRC கூட்டம் கூட்டப்பட வேண்டும். செயல்திட்ட அளவில் GRC-யால் முடிவு எடுக்க இயலவில்லை என்றால், அந்தப் புகாரை தீர்வுகாண்பதற்காக கார்பரேட் GRC-க்கு அனுப்பலாம். GRC ஆனது, புகார்களை பெற்ற 30-45 நாட்களுக்குள் அதன் முடிவை அறிவிக்க வேண்டும். செயல்திட்ட நிலை GRC-ன் முடிவு மீது, புகார் செய்தவருக்கு / மேல்முறையீடு செய்தவருக்கு திருப்தியில்லையென்றால், அவர்கள் மறுஆய்வு கோரி கார்பரேட் GRC-க்கு ஒரு மேல்முறையீடு செய்யலாம். உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த இயக்குமுறை, எந்த நிலையிலும் நாட்டின் நீதித்துறை அல்லது நிர்வாகத்துறை சார்ந்த தீர்வழிகளை நாடுவதை தடைசெய்யவில்லை. மேலும், குறைதீர்வு என்பது, செயல்முறையில் உள்ள ஒரு உள்ளார்ந்த மரம் / பயிர் இழப்பீட்டையும் உள்ளடக்கியதாகும். இதில் உண்மையான இழப்பு மதிப்பீடின் அடிப்படையில் வருவாய்த்துறை அதிகாரிகளால் அறிவிப்பு கொடுக்கப்பட்டபிறகு, பாதிக்கப்பட்ட நபர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படும். இழப்பீடு கோரும் வேண்டுகோள்கள் / மனக்குறைகள் பொதுவாக திறந்த மன்றத்தில் மற்றும் பல சாட்சிகளின் முன்னிலையில் வெளிப்படையாக பரிசீலிக்கப்படும். மாவட்ட ஆட்சியரால் சம்பந்தப்பட்ட இடத்திற்கே வந்து உடனடி சோதனை நடத்துவது மற்றும் எதேச்சைப்படுத்தப்பட்டவாறு சோதனை மேற்கொள்ளும் செய்முறையானது, முறைகேடு / புகார் எதுவும் குறித்து தங்களது குறைகளை எழுப்புவதற்கும் மக்களுக்கு வாய்ப்பு வழங்குகிறது.

vii. CPTD இழப்பீடு வழங்கும் திட்டம், ADB-ன் SPS AIIB-ன் ESPS மற்றும் கடன் வாங்குபவரின் உள்நாட்டுக்கொள்கை முறையாவணங்கள் மற்றும் சட்டங்களைச் சார்ந்ததாகும். இது டிரான்ஸ்மிஷன் செயல்திட்டமாக இருப்பதால், இந்த செயல்திட்டத்திற்கு பொருந்தக்கூடிய உகந்த தேசிய சட்டங்களாக (i) 2003-ம் ஆண்டு மின்சார சட்டம் (ii) 1985ம் ஆண்டு இந்திய டெலிகிராஃப் சட்டம் (iii) ROW-க்கு இழப்பீடு வழங்குதல் குறித்த அக்டோபர் மாத 2015-ம் ஆண்டு MoP வழிமுறைகள் ஆகியவை இருக்கின்றன. இந்த செயல்திட்டத்திற்கு பின்பற்றப்படும் இழப்பீடு வழங்கும் கோட்பாடுகள் இந்திய அரசாங்கத்தின் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைவிதிகள், பவர்கிரிட்-ன் ESPP மற்றும் ADB-ன், SPS, AIIB-ன் ESPS ஆகியவற்றுக்கு இணக்கமானதாக இருக்க வேண்டும்.

viii. அட்டவணை E-1-ல் கொடுக்கப்பட்டுள்ள தகுதியான அம்சங்களின் தொகுப்புக்கேற்ப நிலம் மற்றும் பயிர்கள் / மரங்கள் / கட்டமைப்புகளில் தற்காலிக இழப்புகளுக்கு இழப்பீடு பெறுவதற்கு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு (AP) தகுதி உண்டு. டிரான்ஸ்மிஷன் லைன்கள் கட்டுமானத்தின்போது ஏற்படும் தற்காலிக இழப்புகளுக்கு இதற்குரிய விதிமுறைகளின்படி இழப்பீடு வழங்கப்படும். பாதிக்கப்பட்ட நபர்கள் (AP) அனைவருக்கும் அவர்களுடைய சமயம், ஜாதி மற்றும் பொருளாதார நிலையை கருத்தில்கொள்ளாமல், ஏற்பட்டிருக்கும் உண்மையான இழப்புகளுக்காக இழப்பீடு வழங்கப்படும். மேலும் ஒரு கூடுதல் உதவியாக, தேவையான திறனுள்ள உள்ளூர் தொழிலாளர்களை பணிக்கு சேர்ப்பதற்கு கட்டுமான ஒப்பந்ததாரர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாநில அதிகார அமைப்பின் (அதிகாரியின்) பரிந்துரையின்பேரில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு ஒருமுறை ஒட்டுமொத்தத்தொகை உதவி வழங்குவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. உரிமைத்தகுதி தொகுப்பில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பது போல நில உரிமை ஆவணத்தை கொண்டிராதவர்கள் உட்பட அனைத்து பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் பவர்கிரிட் நிறுவனம் இழப்பீடு வழங்கும்.

**அட்டவண E-1: உரிமைத்தகுதி தொகுப்பு**

| வ. எண். | பிரச்சினை / பாதிப்பு வகை | பயனடைவோர் | உரிமைத்தகுதி விருப்பத்தேர்வுகள் |
|---|---|---|---|
| 1. | பயிர்கள் மற்றும் மரங்கள் இழப்பு | உரிமைத்தகுதி ஆவணம் கொண்டிருப்பவர் | பயிர்களுக்கு சந்தை மதிப்பு விலையிலும் மற்றும் பழம் உள்ள மரங்களுக்கு 8 ஆண்டு வருமானமும் இழப்பீடாக வழங்கப்படும். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களுடைய பயிர்களை அறுவடை செய்வதற்கு முன்கூட்டியே அறிவிப்பு கொடுக்கப்படும். வெட்டப்படும் மரங்களை உரிமையாளர்கள் வைத்துக்கொள்ளலாம் |
| 2. | பயிர்கள் மற்றும் மரங்கள் இழப்பு | வாடகைதாரர்கள் / சிறு விவசாயிகள் மற்றும் குத்தகையாளர்கள்[2] | பயிரிடுபவர் மட்டும்[3] பயிர்களுக்கு சந்தை மதிப்பு விலையிலும் மற்றும் பழம் உள்ள மரங்களுக்கு 8 ஆண்டு வருமானமும் இழப்பீடாக பெறுவார். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களுடைய பயிர்களை அறுவடை செய்வதற்கு முன்கூட்டிய அறிவிப்பு கொடுக்கப்படும். |

[2] உரிமைத்தகுதி ஆவணமில்லாத பாதிக்கப்பட்ட நபர்களும் இதில் உள்ளடங்குவார்கள்

[3] இழப்பீடானது சாகுபடி செய்பவருக்கு வழங்கப்படுவது குறித்து பாதிக்கப்பட்ட குத்தகைதாரர் / வாடகைதாரர் / பகிர்ந்து பயிரிடுபவருக்கு பவர்கிரிட் விளக்கமளிக்கும் மற்றும் இதை பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை அவர்கள் தங்களுக்குள்ளேயே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 3. | இதர இழப்பீடுகள் (பொருந்துமானால்) | அனைத்து பாதிக்கப்பட்ட நபர்கள் (AP)[4] | சம்பந்தப்பட்ட அதிகாரியால் மதிப்பீடு செய்யப்படும் மாற்றுகைக்கான செலவுத்தொகை. |
| 4. | கட்டமைப்பு இழப்பு | | |
| | a) வீடு | | |
| i) | வீடு இழப்பு / அகற்றப்படுதல் | உரிமைத்தகுதி வைத்திருப்பவர்கள் / உரிமைத்தகுதியை கொண்டிராதவர்கள் | கீழுள்ள வகைப்பிரிவு 5-ன்படி நிலைமாற்றத்திற்கான பயன்கள் மற்றும் வீடு கட்டிக்கொள்வதற்கு ரூ.25,000/- உதவித்தொகையுடன் (நலிந்த பிரிவினருக்கான வீட்டு வசதிக்கு தற்போதுள்ள இந்திய அரசின் விதிமுறைகளின் அடிப்படையில்) மாற்றுதலுக்கான செலவுத்தொகை (மீட்கப்பட்ட பொருளுக்காக பிடித்தம் செய்யாமல்) ரொக்கப்பணமாக இழப்பீடு வழங்கப்படும். |
| | b) கடை / நிறுவனங்கள் | | |
| (i) | வீடு இழப்பு / அகற்றப்படுதல் | உரிமைத்தகுதி வைத்திருப்பவர்கள் / உரிமைத்தகுதி கொண்டிராதவர்கள் | நிலைமாற்றக்கால பயன்கள் மற்றும் 1 ஆண்டு வருமானத்திற்கு சரிநிகரான மறுவாழ்வு உதவித்தொகையாக பணிபுரிவதற்குரிய கொட்டகை (ஷெட்) / கடை கட்டுமானத்திற்காக ரூ.10,000த்துடன் ரொக்கப்பணம் இழப்பீடாக வழங்கப்படும். |
| 5. | இடம்பெயர்ந்த நபர்கள் / நிறுவனங்கள் / இடமாற்ற செய்யும்போது இழப்புகள் / மாற்றுகை / போக்குவரத்து | குடும்பம் / யூனிட் | பொருள் / கால்நடைகளை தற்போதுள்ள இடத்திலிருந்து மாற்று இடத்திற்கு இடம் மாற்றுவதற்கு போக்குவரத்து செலவு அல்லது அதற்கு சரிநிகர் ரொக்கப்பணம் வழங்குதல். |
| 6. | பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு பாதிப்புகள் | பாதிக்கக்கூடிய நபர்கள்[5] | மாநில அரசு அதிகாரியின் பரிந்துரையின்பேரில் பாதிக்கத்தக்க குடும்பங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் மொத்தத்தொகை. இது, மற்ற உதவிகளுக்கும் மேலாக வழங்கப்படும். கார்பரேட் சமூக பொறுப்புடைமை (CSR) செயல்நடவடிக்கைகளின் கீழ் |

[4] உரிமைத்தகுதி ஆவணமுள்ளவர்கள் மற்றும் ஆவணமில்லாதவர்கள்.

[5] உள்ளூர் நிர்வாக அமைப்பால் சான்றளிக்கப்பட்டவாறு பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர்களுள் பட்டியல் பழங்குடியினர் / பட்டியல் சாதியினர் / பெண்கள் குடும்ப தலைவராகவுள்ள / உடல்சார் ஊனமுள்ள நபர்கள், திறனிழப்புள்ள குடும்பங்கள் ஆகியவையும் உள்ளடங்கும்.

| | | | |
|---|---|---|---|
| | | | பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு முன்னுரிமை பெறுவது. |
| 7. | கோபுர அடித்தளத்திற்கு கீழே உள்ள நிலப்பகுதி | உரிமையாளர் | மாவட்ட நீதிபதி ஆட்சியரால் முடிவுசெய்யப்படுகிறவாறு நில விலையில் 85% (#) |
| 8. | வழிஉரிமை வழிப்பாதையில் வரும் நிலம் | உரிமையாளர் | மாவட்ட நீதிபதி முடிவுசெய்யப்படுகிறவாறு நில விலையில் 15% (#) |

RoW டிரான்ஸ்மிஷன் லைனுக்காக (#) குறித்த சேதங்களுக்கான இழப்பீடு தொகை வழங்கப்படுவது குறித்து 15.10.15-ல் தேதியிடப்பட்ட MoP வழிகாட்டுதல்படி மாநில அரசின் செயல்படுத்தல் / அமலாக்க முறைக்கு உட்பட்டது.

ix. உத்தேசிக்கப்படும் செயல்திட்டத்தில் இடப்பெயர்வு எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. டிரான்ஸ்மிஷன் லைன் வழித்தட இணக்கத்தன்மை (நீக்குப்போக்குத்தன்மை) காரணமாக டிரான்ஸ்மிஷன் லைனில் பெரும் பாதிப்புகள் எதிர்பார்க்கப்படவில்லை. பயிர்களுக்கு பாதிப்புகளை குறைப்பதற்காக டிரான்ஸ்மிஷன் கட்டுமானப்பணியானது, பொதுவாக பயிர்சாகுபடி செய்யப்படாத காலத்தில் மேற்கொள்ளப்படுகிறது. டிரான்ஸ்மிஷன் லைன் செயல்திட்டங்களில் கட்டமைப்புகளை இடமாற்றம் செய்வது சாதாரணமாக எதிர்பார்க்கப்படவில்லை. எனினும், தேவையானபோது, உரிமைத்தகுதி தொகுப்பின்படி இத்தகைய கட்டமைப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். இந்த செயல்திட்டத்திற்கு CPTD அமலாக்க செலவு மதிப்பீடில் பயிர்கள், மரங்கள் மற்றும் கட்டமைப்புகள் பாதிப்புகளுக் தகுதியுடைய இழப்பீடு மற்றும் CPTD அமலாக்கத்திற்குரிய ஆதரவு செலவு, கண்காணிப்பு பணி, இதர நிர்வாகச்செலவு முதலியன உள்ளடங்கும். இது ஒரு உத்தேச பட்ஜெட் ஆகும். இது, உண்மையான அமலாக்க நடவடிக்கையின்போது மாறக்கூடும். எனவே, பட்ஜெட்டில் 3% எதிர்பாராத செலவுக்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. மொத்த செலவீனமானது, இந்திய ரூபாய் 28498.71 லட்சமாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது 43.84 மில்லியன் அமெரிக்க டாலருக்கு சரிநிகராகும்.

x. இந்த செயல்திட்டத்திற்கு அமலாக்க நிறுவனம் (IA) ஆக பவர்கிரிட் நிறுவனம் இருக்கும். அமல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளுதல் ஆகிய முக்கிய செயல்நடவடிக்கைகள் அத்தியாயம் - X-ல் வகை செய்யப்பட்டுள்ள அமலாக்க விளக்கப்படம் / அட்டவணைப்படி பின்பற்றப்பட வேண்டும். கண்காணிப்பு நடவடிக்கை என்பது, பணிஅமைவிடத்தை தேர்வுசெய்தல், கட்டுமானம் அல்லது பராமரிப்பு செய்தல் என்று எந்தவொரு நிலையாக இருந்தாலும், அனைத்து நிலைகளிலும் பவர்கிரிட் செயல்திட்டங்களுக்கான ஒரு தொடர்நடவடிக்கையாக இருக்கும். பவர்கிரிட் நிறுவனத்தின் வெற்றி என்பது, அதன் உறுதிமிக்க கண்காணிப்பு அமைப்புமுறைகளைச் சார்ந்திருக்கிறது. பணிமுன்னேற்றம் குறித்து தினசரி அடிப்படையில் பணிஅமைவிட மேலாளர்கள் ஆய்வுசெய்வது தவிர, குறைந்தபட்சம் மாதாந்திர அடிப்படையில் ஒழுங்குமுறையான ஆய்வுகூட்டங்களும் நடைபெறுகின்றன. அந்த மண்டலத்தின் செயல் இயக்குநர் தலைமையில் நடைபெறும் இந்தக்கூட்டத்தில் கட்டுமானம் குறித்த பிரச்சினைகள் தவிர, செயல்திட்டங்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அம்சங்கள்

குறித்தும் விவாதிக்கப்படுவதுடன் தேவையானபோது தீர்வு நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. இந்த கூட்டங்களின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை இந்நிறுவன இயக்குநர்கள் மற்றும் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருக்கு (CMD) சமர்ப்பிக்கப்படுகின்றன. நடைபெற்றுவரும் பல்வேறு செயல்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இயக்குநர்கள் குழுவிற்கு தெரிவிக்கப்படும். சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து கண்காணிப்பதற்கென கார்பரேட் மையத்தில் தனியாக ஒரு சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைத்துறையும் (ESMD) மற்றும் RHQ-வில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை பிரிவும் (ESMC) பவர்கிரிட் நிறுவனத்தில் உள்ளன. பணிஅமைவிட அளவில் CPTD-ஐ அமல்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கென சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக்குழு (ESMT) அமைத்துருவாக்கப்படும்.

xi. பொதுமக்களுடன் கலந்தாலோசனை மற்றும் உள்கண்காணிப்பு நடவடிக்கைகள், இடைவெளிவிட்டு நிகழ்வதன் அடிப்படையில் செயல்திட்டத்தின் ஒட்டுமொத்த காலஅளவிற்கும் தொடரப்படும். உள்கண்காணிப்பு நடவடிக்கைகள் பவர்கிரிட்ன் கடமையாகும். பவர்கிரிட் அவற்றின் அமலாக்க செயல்பாடு குறித்த அரையாண்டு அறிக்கைகளை ADB & AIIBக்கு சமர்ப்பிப்பதுடன் அவற்றின் வலைதளத்தில் வெளியிடுவதற்காக அவற்றையும் சமர்ப்பிக்கும். வெளியார்ந்த கண்காணிப்புக்காக ஒரு தன்னிச்சையான முகமையின் சேவைகளையும் பவர்கிரிட் பயன்படுத்திக்கொள்ளும் .